# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,974 — 1933 ம் ஞூ பங்குனிமீ 31 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் விளம்பரம்.

1901 ம் ஆண்டின் நாய்களைப் பதிவுசெய்வதைப்பற்றிய சட்டம்.

நாய்களைப் பதிவுசெய்வதைப்பற்றிய 1901 ம் ஆண்டின் 25 ம் இலக்கச் சட்டத்தின் 5 ம், 6 ம் பிரிவுகளின்படியும், 1920 ம் ஆண்டின் 11 ம் இலக்கச் சனுதிகார ஆட்சிச் சட்டத்தின் 245 ம் பிரிவின்படியும் வேருவலைப் பட்டினப்பாக்க மண்டலசபையாரால் உண்டாக்கப்பட்ட உபவிதிகள்.

ஜே. பீ. எம். பெரேரா,
சபா நாயகர்.

வேருவலை,
1933 ம் ஞூ மார்ச்சுமீ 28 ந் தேதி.

உபவிதிகள்.

வேருவலைப் பட்டின மண்டலசபையின், பரிபாலன எல்லைக்குள் நிற்கும், ஒவ்வொரு நாய்களின் பொருட்டும், அந்த நாயை வைத்திருப்பவர் அல்லது அதற்குப் பொறுப்பாயிருப்பவர் பதிவுப்பணமாக, ஒரு ரூபாய் ஒவ்வொரு ஆண் நாய்க்கும், ரூ. 1·50 ஒரு பெண் நாய்க்கும் வருஷ வீதங் கட்டுதல் வேண்டும். இந்த உபவிதியின் நோக்கத்திற்காக, ஒரு வருஷம் என்பது ஏப்பிறில்மீ 1 ந் திகதி தொடக்கம் அடுத்த வருஷம் மார்ச்சுமீ 31 ந் திகதி வரையிலும் உள்ள காலம் எனக் கணக்கிடப்படும்.

2. குறித்தபட்டின மண்டலசபையின் பரிபாலன எல்லைக்குள் நாய் நிற்கும் வீட்டின் அதிகாரியாயுள்ள ஒவ்வொருவரும், அந்தந்த வருஷத்தில் ஜனவரிமீ 31 ந் திகதிக்கு முந்தியே மேற்படி சபையின் அக்கிராசனரால், நியமிக்கப்பட்டுள்ள வரியறவிடுபவரிடம் (Tax Collector) தம்மிடத்திலுள்ள நாயைக் குறித்த விபரங்கள் கீழே காட்டப்படும் "A" என்னும் அடையாளமிடப்பட்ட பத்திரத்திலே நிரப்பிக் கொடுத்தல் வேண்டும்.

3. (1) கீழே காட்டப்படும் "B" என்னும் அடையாளமிடப்பட்ட சேட்டிவிக்கேற் பத்திரமொன்று பதிவுப்பணம் பெற்றவுடனே வரி அறவிடும் உத்தியோகஸ்தராலேனும் மேற்படி சபையின் காரியதரிசியாலேனும் கொடுக்கப்படும்.

4. (a) தனது அபிப்பிராயப்படி ஒரு நாய் மிகவும் நோய்ப்பட்டதாயும் அதைப் பிடித்திருக்கும் நோய் மறு நாய்களுக்குத் தொத்தக்கூடியதாயும் இருக்குமாகில் அல்லது ;

(b) வயது முதிர்ந்து நோய்வாய்ப்பட்டு அல்லது ஊறடைந்திருப்பதினால் அது உயிரோடு இருப்பது நன்றன்று என்பதாகக் காணப்படுமாகில் வரி அறவிடும் உத்தியோகஸ்தரேனும், காரியதரிசியேனும் பதிவுச் சேட்டிவிக்கேற் பத்திரங் கொடுக்க மறுக்கலாம்.

(2) அல்லது அவர்களின் எவராவது நாயின் நிலைக்குத்தக்க நிபந்தனைகளோடு சேட்டிபிக்கற் பத்திரம் கொடுக்கலாம். இங்ஙனம் கொடுக்கவில்லையென்றேனும் நிபந்தனைகள் விதித்தாரென்றேனும், எவராவது திருப்தியீனப்பட்டால் அவர் மேற்படி சபையின் அக்கிராசனரிடம் அப்பீல் முறையீடு செய்துகொள்ளலாம். அவ்வக்கிராசனர் அதை உறுதிப்படுத்தலாம், மாற்றலாம் அல்லது அழித்துவிடலாம்.

5. ஒவ்வொரு பதிவுச் சேட்டிவிக்கேற் பத்திரத்திலும் பின்வரும் நிபந்தனைகள் அச்சிடப்பட்டிருக்கும், அவையாவன :—

(a) குறித்த நாய் மிகவும் நோய் பிடித்திருப்பதால் அல்லது அங்கவீனப்பட்டிருப்பதால் அது உயிரோடிருப்பது நல்லதல்லவென்று அக்கிராசனர் கண்டால் ;

(b) சொந்தக்காரன் அந்த நாயைக் கொடுமையாக நடத்துகிறதாக அல்லது கவனியாது விடுகிறதாக அக்கிராசனர் கண்டால் ;

(c) குறித்த நாய் தொற்றுவியாதியினால் பிடிக்கப்பட்டிருக்கிறபோது, சொந்தக்காரன் அதை மற்றும் நாய்களோடு ஊடாடித் திரியாவிட்டால் ; மேற்படி வேருவலைப் பட்டின மண்டலசபையில் அக்கிராசனரால் இச்சேட்டிவிக்கேற் பத்திரம் அழித்துவிடப்படுவதற்கு இடமானதாகும்.

6 (a) சேட்டிவிக்கற் பத்திரம் கொடாது விடப்பட்ட அல்லது (b) அப்பத்திரத்தில் எழுதியுள்ள நிபந்தனையொன்று நிறைவேற்றப்படாததினால் சேட்டிவிக்கேற் பத்திரம் அழித்துவிடப்பட்ட நாயை வைத்திருப்பவர் அறிவித்தலில் குறிக்கப்பட்ட நேரத்தில் அந்த நாயைக் கொண்டுவந்து சங்கக் கந்தோரில் அதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தரிடம் ஒப்பித்தல்வேண்டும். அக்கிராசனர் அந்த நாய்களின் விஷயத்தில் என்ன செய்யவேண்டுமென்று தீர்மானிக்கிறாரோ அவ்வண்ணமே செய்தல் வேண்டும்.

போர்ம் "A".

நாய்களைக்குறித்த உபவிதிகளின்படி எழுதிக்கொடுக்கவேண்டிய விபரப் பத்திரம் :——.

வீட்டிலக்கம் :——.

தெரு :——

வீட்டுக்காரனுடைய பெயர் :——.

| வீட்டிலுள்ள நாய்களின் தொகை. | விபரம் | | | | | | சொந்தக்காரன் பெயர் | பணம் கட்டிய தேதி |
|---|---|---|---|---|---|---|---|---|
| | சாதி | ஆணோ பெண்ணோ | நிறம் | கழுத்தின் அளவு | ஏதும் விசேஷ அடையாளம் | குறிப்பு | | |
| | | | | | | | | மார்ச்சுமீ 31ந் திகதி யன்று அல்லது அதற்கு முன் |

வீட்டுக்காரனுடைய கையொப்பம்.

அறிவித்தல் ஒப்புவித்த தேதி :——

வேருவலை, 193 —— ம் ஹூ ———— மீ —— ந் தேதி.

மேற்சொல்லிய வீட்டுக்காரன் மேலேயுள்ள போர்ம் பத்திரத்தை ஒருகிழமைக்குள் நிறப்பி அனுப்பும்படி கேட்கப்படுகிருர். அப்படிச் செய்யத் தவறும் எவரும் ரூபாய் 20 தெண்டம் இறுப்பதற்குப் பாத்திரர் ஆவர்.

அக்கிராசனரின் கட்டளைப்படி,

காரியதரிசி.

பட்டினமண்டல சபைக் கந்தோர்,

வேருவலை, 193 —— ம் ஹூ ———— மீ —— ந் தேதி.

போர்ம் "B".

நாய்களைப் பதிவு செய்ததைப்பற்றிய சேட்டிவிக்கேற் பத்திரம்.

பதியப்பட்ட இலக்கம் :——.

தெரு :——.

—— இலக்க வீட்டிலிருக்கும் —— என்பவர் கீழே விபரிக்கப் பட்டிருக்கும் மாதிரியான ஒரு ஆண்/பெண் நாயை இன்று இந்தக் கந்தோரிற் பதிவுசெய்திருக்கிருர் என்றும் அதற்காக ரூபா ———பதிவுப் பணமாய்க் காட்டப்பட்டிருக்கிறதென்றும் இதனுல் உறுதிப்படுத்தப்படுகின்றது.

நாயின் விபரம்.

சாதி :——.

ஆணோ பெண்ணோ :——.

நிறம் :——.

கழுத்தின் அளவு :——.

ஏதும் விசேஷ அடையாளம் :——.

இந்த சேட்டிவிக்கேற் பத்திரம் 19——ம் ஆண்டு மார்ச்சுமீ 31 ந் தேதி வரைக்கும் பெலப்புடையதாயிருக்கும்.

காரியதரிசி.

பட்டின பரிபாலன சங்கக் கந்தோர்,

வேருவலை, 193 ம் ஆண்டு பங்குனிமீ ந் தேதி.

## அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தங்காலைப் பொனப்பிட்டணிக்கருகில் கரத்தைகிற்பாட்ட என்னும் பகிரங்க தேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இலக்கம் 315. குறிச்சி—மடில்ல.

| துண்டு. | காணியினது பெயர். | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 13c | ஹூனுகொகுலந்த .. | வெண்காணி .. | பீ. எச். விக்ரமசிங்க .. | 0 0 4·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஹூ மேமாசம் 3 ந் தேதியிலன்று பகல் 2 மணிக்கு தங்காலை தானையத்தில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

அம்மான்தோடைக் கச்சேரி,
1933 ம் ஹூ மார்ச்சுமீ 22 ந் உ.

எப். லீச்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் கவுன்கடுவா என்னுங் கிராமத்தில் ஒரு சவக்காலை அமைக்க என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணியை அஃதாவது :—

பிரதமபடத்து இல. 4,190. குறிச்சி—கவ்வுன்கடுவ.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | மீகாஎலகேன அல்லது கலஉடகேன | சேனை .. | அமரக்கோன் கெதற முதலிகாமி, டெவி சேகர முதியான்செலாகே அப்புகாமியும் பானசுதிகெதிற அப்புகாமி | 0 3 30·2 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனுல் அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிருர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ஹூ சித்திரை மாசம் 28 ந் தேதியிலன்று 10 மணிக்கு கேகாலை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கேகாலை கச்சேரி,
1933 ம் ஹூ பங்குனிமீ 28 ந் உ.

ஈ. எச். ஹுசெற்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

## காணி நிர்ணய முன்னறிவித்தல்களைக் குறித்த விளம்பரங்கள்.

### 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 378 (கண்டி).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் வரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்கைதக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1933 ம் ஹு (மார்ச்சு) பங்குனிமீ 31 ங் திகதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச்சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காகணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1933 ம் ஹு (மார்ச்) பங்குனிமீ 1 ங் தேதியிலன்று கண்டி கச்சேரியிற் கொடுக்கப்பட்டது.

டபிள்யு. டீ. கொட்சோல்,
உதவி அரசாட்சி ஏஜன்ற், கண்டி.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்திய மாகாண அரசாட்சி ஏசண்டரிடமும் அவைகளின் அளவைப்படம் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளைவறறிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக் காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திறிக், பாததும்பற டிவிவின், பலிஸ்பத்து மேறகு கோறளை, அறத்தனை கிராமத்திலிருப்பதும் கீழ்க்காணும் எல்லைக்குட்பட்டதுமான காணித்துண்டுகள்.

I.—பிரதமபடம் 8,681.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | டிக்கினபத்தன அல்லது பித்தகண்ட .. | 84 | 3 | 4 |
| 3 | — .. | 1 | 3 | 12 |
| 4 | டிக்கினபத்தன அல்லது பித்தகண்ட .. | 44 | 3 | 6 |
| 5 | டிக்கினவத்த (கன்சபா பாதையோடு சேமித்தது) .. | 0 | 0 | 4 |
| 9 | பித்தகண்ட (கன்சபா பாதையோடு சேமித்தது) .. | 0 | 0 | 5 |
| 10 | ஷை .. | 0 | 0 | 33 |
| 13 | டிக்கினபத்தன (வாய்க்காலோடு சேமித்தது) | 0 | 0 | 9 |
| 14 | ஷை .. | 0 | 0 | 11 |
| 15 | டிக்கினபத்தன .. | 0 | 0 | 23 |
| | மொத்தம் | 131 | 3 | 27 |

எல்லை வடக்கு: முடியால் தீர்த்துக் கொடுக்கப்பட்ட சென்ற் ஜோன்ஸ் கில்எஸ்ரேற் (பி. ப. 8681/2). கமதொல்ல எலா, உரிமைபடம் 192,015 ல் விபரித்திருக்கும் காணி;

கிழக்கு: 198,813 ம் இல. உரிமைபடத்தில விபரித்திருக்கும் காணி, முடி உரித்தாடும் பித்தகண்டபத்தன (பி. ப. 6,161/466) முடியால் தீர்த்துக்கொடுக்கப்பட்ட டிக்கினவத்த (பி.ப. 8,681/6), முடி உரித்தாடும் பிததகண்ட (பி.ப. 8,681/8), மெசஸ் கேடன் பிறேசர் அன்ட் கொம்பனி உரித்தாடும் அறத்தன எஸ்ரேற், உரிமைப்படம் 219,086 ல் விபரித்த காணி, கன்சபா பாதை, மெசஸ் கோடன் பிறேசர் அன்ட் கொம்பனி உரித்தாடும் அறத்தன எஸ்ரேற், உரிமைபடங்கள், 225,211, 236,576, 275,446 ல் விபரித்த காணிகள், முடியால் தீர்த்துக் கொடுக்கப்படிட டிககினபத்தன (பி. ப. 8,681/12), மெசஸ் கோடன் பிறேசர் அன்ட் கொம்பனி உரித்தாடும் அறத்தன் எஸ்ரேற், மெசஸ் மாகலூட் அன்ட் கொம்பனி (எச்சன்ஸ்) ம் மறுவும் உரிததாடும் றக்சாவா எஸ்ரேற்;

தெற்கு: உரிமைபடம் 72,476 ல் விபரத்த காணி;

மேற்கு: குக்குஸ்ஓயா.

II.—பிரதமபட இல. 8,681.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 7 | எலஅழிய எஸ்ரேற் .. .. | 0 | 1 | 8 |
| 8 | பித்தகண்ட .. .. | 0 | 2 | 12 |
| | மொத்தம் .. | 0 | 3 | 20 |

எல்லைவடக்கு: உரிமைப்படம் 298,813 பாதை, உரிமைப்படம் 82,989;

கிழக்கு: உரிமைபடம் 82,989;

தெற்கு: முடியால் தீர்த்துக் கொடுக்கப்பட்ட அறத்தன எஸ்ரேற் (பி. ப. 8,681/11);

மேற்கு: முடி உரித்தாடும் பித்தகண்ட (பி. ப. 8681/9), முடியால் தீர்த்துக் கொடுக்கப்பட்ட டிக்கினவத்த (பி. ப. 8.681/6).

---

### 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச்சட்டம்.

காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்
நி. 379 (கண்டி).

இதனோடிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எதற்கேனும் அதன் எப்பங்குக்கேனும் அதில் எச்சோங்கைதக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1933 ம் ஹு (மார்ச்சு) பங்குனிமீ 31 ங் தேதியிலிருந்து மூன்று மாச காலத்திற்குள் இதனடியிற் கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச்சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியனசெய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இதனால் அறிவித்தல் கொடுக்கப்படுகின்றது.

1932 ம் ஹு (டிசெம்பர்) மார்கழிமீ 23 ங் தேதியிலன்று கண்டிக் கச்சேரியிற் கொடுக்கப்பட்டது.

டபிள்யு. டீ. கொட்சோல்.
உதவி அரசாட்சி ஏஜன்ற், கண்டி.

குறிப்பு.—(*a*) இக்காணிகளைப்பற்றிய இன்னும் மேலதிகமான விபரம் மத்தியமாகாண அரசாட்சி ஏசண்டரிடமும் அவைகளின் அளவைப் படங்கள் (சர்வேயர் ஜெனறல்) நில அளவைக் காரியகர்த்தரிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

(*b*) இக்காணிகளைவறறிலேனுமுள்ள வழியுரித்து அக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

மத்திய மாகாணம், கண்டி டிஸ்திரிக், உடபலாதைப் பகுதி, கங்கஇகல கோறளையிலுள்ள கிராவில கிராமத்திலிருப்பதும் கீழ்க்காணும் எல்லைகட்குட்பட்டதுமான காணித்துண்டுகள்:—

வடக்கு: கேகாலை டிஸ்திறிக்கிலுள்ள சீலாவ கிராம எல்லை;

கிழக்கு: முடி உரித்தாடும் உணகொல்லஏன (பி. ப. 8,427/141), முடி உரித்தாடும் கம்மககெவதத (பி. ப. 8,427/196), முடி உரித்தாடும் கம்மககெதெனிய (பி. ப. 8,427/197), முடி உரிததாடும் கம்மககெகேன (பி. ப. 8,427/198), முடி உரித்தாடும் தென்னகேன (பி. ப. 8,427/199);

தெற்கு: 50,750 ம் இலக்க உரிமைப்படத்தில் விபரித்திருக்கும் காணி, முடியால் விற்கப்பட்ட வல்லககொல்ல அல்லது கெற்றகொகெல்ல (பி. ப. 8,667/32), 50,750 ம் இலக்க உரிமைப்படத்தில் விவரித்த காணி;

மேற்கு: றூவான்குருவ அல்லது சீலாவ அல்லது குடஓயா.

பிரதமபடத்து இல. 8,

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 33 | வல்லககொல்ல .. .. | 5 | 1 | 35 |
| 34 | ஷை றூவன்குருவ அல்லது சீலாவ அல்லது குடஓயாவோடு சேமித்தது) .. | 5 | 0 | 34 |
| 35 | வல்லககொல்ல அல்லது கெற்றகொகெல்ல எஸ்ரேற் .. .. | 2 | 0 | 24 |
| 36 | வல்லககொல்ல .. .. | 0 | 1 | 28 |
| 37 | கொஸ்வதத அல்லது வல்லககொல்ல (றூவன்குருவ அல்லது சீலாவ அல்லது குடஓயாவோடு சேமித்தது) .. | 0 | 2 | 8 |
| | மொத்தம் .. | 13 | 3 | 9 |

## 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம்.

### காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

### நி. 380. (புத்தளம்).

இதனுடனிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எவற்றிற்கேனும் அல்லது அவைகளின் எப்பங்குக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1933 ம் ஹூ (மார்ச்சு) பங்குனிமீ 31 ந் தேதி தொடக்கம் மூன்று மாச காலத்திற்குள் கீழே கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

1933 ம் ஹூ (ஜனவரி) தைமீ 27 ந் திகதி புத்தளம் கச்சேரியில் கையொப்பமிடப்பட்டது.

ஈ. ரோட்ரீக்கு,
உதவி அரசாட்சி ஏஜன்ற்.
புத்தளம்—சலாபம் டிஸ்ற்றிக்குகள்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய மறு விபரங்கள் புத்தளம் உதவி அரசாட்சி ஏஜன்டுவிடத்திலும் அவைகளின் படங்கள் அளவைக் கந்தோர்த் தலைவரிடமும் பெற்றுக் கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக்காணிகளுக்குள்ள உரித்தாமென்பதை அறிந்துகொள்க.

அட்டவணை.

வடமேல் மாகாணம், புத்தளம் டிஸ்திறிக் தெமளஹெற்பத்துவ, கிறிமெட்டியாபத்து கனன்கெடெ என்னும் கிராமத்திலுள்ள பின்வரும் காணித் துண்டுகள் :—

பிரதமபடம் 7,596.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|
| 1 | கனன்கெடெகெலெ | .. | ..322 | 0 | 38 |
| 2 | ஷை | (றோட்டோடு சேமிக்கை) | 1 | 3 | 20 |
| 3 | — | (அரை விசாலம்) .. | 0 | 2 | 38 |
| 4 | கனன்கெடெகெலெ | (றோட்டோடு சேமிக்கை) .. | 0 | 3 | 14 |
| 5 | — | (அரை விசாலம்) .. | 0 | 1 | 13 |
| 6 | வீறவல | .. .. | 0 | 2 | 23 |
| 7 | கனன்கெடெவெலெ | .. .. | 13 | 0 | 14 |
| 8 | — | (தண்ணீரில்லா அணை) .. | 0 | 1 | 8 |
| 9 | கனன்கெடெகெலெ | .. .. | 60 | 2 | 10 |
| 10 | ஷை | (குளக்கட்டோடவும் ஹொறவலயோடவும் சேமிக்கை) .. | 0 | 1 | 20 |
| 11 | ஹொறவல | .. .. | 0 | 1 | 10 |
| 12 | கனன்கெடெகெலெ | (குளக்கட்டோடவும் ஹொறவலயோடவும் சேமிக்கை) .. | 1 | 0 | 24 |
| 13 | ஷை | (ஹொறவலயோடு சேமிக்கை) .. | 1 | 3 | 14 |
| 14 | ஷை | ( ஷை ) | 1 | 2 | 30 |
| 15 | கனன்கெடெகெலெ | .. .. | 9 | 1 | 14 |
| 17 | கனன்கெடெவெல | .. .. | 1 | 2 | 13 |
| 18 | — | (குளக்கட்டு) .. | 0 | 0 | 24 |
| 19 | — | (தண்ணீரில்லா அணை) .. | 0 | 0 | 5 |
| 20 | கனன்கெடெகெலே | .. .. | 0 | 0 | 35 |
| 21 | — | (குளக்கட்டு) .. | 0 | 0 | 22 |
| 22 | கனன்கெடெகெலெ | (கன்சபாவ றோட்டோடு சேமிக்கை) | 0 | 1 | 28 |
| 23 | — | (கன்சபாவ றோட்டு) .. | 0 | 2 | 30 |
| 24 | கனன்கெடெகெலெ | (கன்சபாவ றோட்டோடு சேமிக்கை) | 0 | 1 | 20 |
| 25 | — | (குளக்கட்டு) .. | 0 | 0 | 12 |
| 26 | கனன்கெ[illegible]கெலெ | .. .. | 21 | 1 | 28 |
| 27 | ஷை | .. .. | 0 | 3 | 32 |
| 28 | கனன்கெ[illegible]கெலெ | (காலடிப்பாட்டுக்காக சேமிக்கை) .. | 0 | 0 | 8 |
| 29 | கனன்கெடெ | .. .. | 4 | 1 | 10 |
| 30 | சியம்பலாககாகேனெ | .. .. | 5 | 3 | 36 |
| 31 | ஷை | (குளககட்டோடு சேமிக்கை) .. | 0 | 1 | 29 |
| 32 | இட்டவெட்டுனவெவெ | .. .. | 1 | 2 | 29 |
| 33 | கனன்கெடெகெலெ | (காலடிப்பாட்டுக்காக சேமிக்கை) .. | 0 | 0 | 14 |
| | | மொத்தம் .. | 453 | 3 | 25 |

நீக்கப்படும் துண்டு.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 16 | கனன்கெடெவெல | .. .. | 2 | 3 | 34 |

இவற்றின் எல்லைகளாவன : வடக்கில்-நவகத்தெகமத்திலிருந்து கிறிமெற்றியாவைககு போகும் றோட்டும், புல்லவ (பாழ்) கிறிமேட்டியாவயின் கிராமஎல்லையும், மல்மதுகமெவிலிருந்து கல்கமுவைக்குப் போகும் றோட்டும் (மல்மதுகமெ கிராமஎல்லை); கிழக்கில்-பளுகஸ்வெவெ கிராம எல்லை; தெற்கில்-றம்புக்கனயகமெயின் கிராம எல்லை; மேற்கில்-கிறிமெட்டியாவ என்னும் கிராமத்தின் எல்லை.

---

## 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டம.

### காணியுரிமை நிர்ணய விஷய அறிவித்தல்

### நி. 381 (புத்தளம்).

இதனுடனிணைத்திருக்கும் அட்டவணையில் விவரித்துள்ள காணிகளில் எவற்றிற்கேனும அல்லது அவைகளின் எப்பங்குக்கேனும் தமக்கு உரித்துண்டென்று 1933 ம் ஹூ (மார்ச்சு) பங்குனிமீ 31 ந் தேதி தொடக்கம் மூன்று மாச காலத்திறகுள் கீழே கையொப்பமிட்டவருக்கு ஒருவரும் அறிவியாதிருக்குமிடத்து 1931 ம் ஆண்டின் காணியுரிமை நிர்ணயச் சட்டத்தின் 5 (1) ம் பிரிவின்படி அக்காணியை முடிக்குரிய காணியென வெளிப்படுத்தி முடிக்குரிய காணியாக அதன் விஷயத்திற் செய்யவேண்டியன செய்து முடிக்கப்படுமென்று மேற்சொல்லிய சட்டத்தின் 4 ம் பிரிவின்படி இத்தா அறிவிக்கப்படுகின்றது.

1933 ம் ஹூ (பெபுருவரி) மாசிமீ 6 ந் திகதி புத்தளம் கச்சேரியில கையொப்பமிடப்பட்டது.

ஈ. றோற்றிகோ,
உதவி அரசாட்சி ஏசண்டு,
புத்தளம்—சலாப டிஸ்ற்றிக்குகள்.

குறிப்பு.—(a) இக்காணிகளைப்பற்றிய மறுவிபரங்கள் புத்தளம உதவி அரசாட்சி ஏசணடுவிடத்திலு மவைகளின் படங்கள் அளவைக் கந்தோர்த் தலைவரிடமும் பெறறுக் கொள்ளலாம்.

(b) இக்காணிகளெவற்றிலேனுமுள்ள வழியுரித்து அவ்வக்காணிகளுக்குள்ள உரிமை உரித்தாமென்பதை அறிந்து கொள்க.

அட்டவணை.

வடமேல் மாகாணம் புத்தளம் டிஸ்திறிக், புத்தளம் கிழக்கில, பததளம் கிராம சங்க எல்லைகளுககுள் உள்ள தற்போது புத்தளம் நகர டிஸ்திறிக் சஙகத்தின் எல்லைகளுக்குள்ள பின்வரும் காணித் துண்டுகள் :—

பிரதமபடம் நிம்பர் 7,623.

| காணித் துண்டு. | காணியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|
| 1 | நெடுங்குளமறவெககாணி .. | 20 | 3 | 33 |
| 2 | கடமியான்குளம்வயல் .. | 1 | 1 | 1 |
| 3 | அம்பலகாறன்குளம் .. | 6 | 2 | 26 |
| | | 28 | 3 | 20 |

எல்லைகளாவன : வடக்கில்-நெடும்குளமும் டீ. பீ. 51,455 ம் ; கிழக்கில்-எஸ். ஏ. எம். ஹனிபா மரைக்காயரும் மற்றவராலும் உரித்தாடப்பட்ட கடமியான்குளம் காணி ; தெற்கில்-ஏ. எல். முகியயதீனும் கே. எம். பக்கீர் பிச்சையும் மறறவர்களாலும் உரித்தாடப்பட்ட கடமியான்குளம் வயலும், எஸ். ஏ. கே. அகமது நெய்னு மரைக்காயரால் உரித்தாடப்பட்ட அம்பலகாறன்குளம் மறவக் காணியும் ; மேற்கில்-எஸ். ஏ. கே. அகமது நெய்னு மரைக்காயரால் உரித்தாடப்பட்ட அம்பலகாறன்குளம் மறவக்காணியும், பீ. எம். ஏ. என். மரைக்காயரும் மற்றவர்களாலும் உரிததாடப்பட்ட வெட்டுக்குளம் காணியும்.

---

## சுப்பிறீங் கோட்டு அறிவித்தல்.

இலங்கைத்தீவிற் சங்கைபொருந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது : காலி நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங்கோட்டாரால் காலி, மாத்துறை, தங்காலை டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினல் வழக்குவிசாரணை, 1933 ம் ஆண்டு எப்றல் மாதம் 25ந் திகதியாகிய செவ்வாய்க்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக்கடவர்கள்.

இங்ஙனம்,
ஜே. டீ. பிரவுன்,
தென் மாகாண பிஸ்காலுக்காக.

காலி பிஸ்கால் கந்தோர்,
1933 ம் ஹூ மார்ச்சுமீ 24 ங் உ.



ජාතික පුස්තකාල හා ප්‍රලේඛන සේවා මණ්ඩලය